முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023" விழாவில், வேளாண் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு. (திருமதி) பீலா ராஜேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

திருச்சியில் 'வேளாண் சங்கமம்-2023' - வேளாண் செயல்பாடுகள் குறித்த

கண்காட்சி அரங்குகள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

பாரம்பரிய நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கினார்!

திருச்சி, ஜூலை 28-

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.7.2023) திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை உழவர் நலத் துறை சார்பில் நடைபெற்ற "வேளாண் சங்கமம் 2023" விழாவில், வேளாண் கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்து, பாரம்பரிய நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கி வாழ்த்தினார்.

அதன் விவரம் வருமாறு:-

2023-24 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைஉழவர் நலத்துறையின் மானிய கோரிக்கையில், ''நவீன தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாநில அளவில் வேளாண் கண்காட்சி திருச்சியில் நடத்தப்படும்'' என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, உயர் விளைச்சல் தரவல்ல புதிய இரகங்கள், பாரம்பரிய நெல் இரகங்கள், வருமானத்தை பெருக்க வேளாண் நவீன தொழில்நுட்பங்கள், உத்திகள், நவீன வேளாண் இயந்திரங்கள், சூரியசக்தி மூலம் இயங்கும் கருவிகள்,செயல் விளக்கங்கள், விளை பொருட்களை மதிப்புக் கூட்டும் முறைகள், தொழில் நுட்பங்கள், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன், பட்டுப்பூச்சி வளர்ப்பு குறித்தான கருத்தரங்குகள், உழவன் செயலி பதிவிறக்கம், திட்டபலன் முன்பதிவுகள் போன்ற வேளாண்மை தொடர்புடைய நிகழ்வுகளை உள்ளடக்கிய, "வேளாண் சங்கமம் - 2023" கண்காட்சியை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இக்கண்காட்சி ஜூலை 27 முதல் ஜூலை 29 வரை திருச்சிராப்பள்ளி, கேர் பொறியியல் கல்லூரியில் நடைபெறும்.

வேளாண்மை - உழவர் நலத்துறையினால் நடத்தப்படும் இக்கண்காட்சியில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல், சர்க்கரைத் துறை, விதைச்சான்று மற்றும் அங்கக சான்று துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்), கைத்தறித்துறை, தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித்துறை, தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியனவும், ஒன்றிய அரசின் ஆராய்ச்சி நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும், ஒன்றிய அரசின் பயிர் வாரியங்களும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மீன் வளப் பல்கலைக்கழகங்களும் பங்கேற்றுள்ளன. .

மேலும், இக்கண்காட்சியில் நுண்ணீர் பாசன நிறுவனங்கள், உர நிறுவனங்கள், வேளாண் இயந்திர நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், வங்கிகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பல்வேறு தனியார் நிறுவனங்களும், அரசுத் துறைகளும் இணைந்து வேளாண் செயல்பாடுகள் சார்ந்த இடுபொருட்கள் செயலாக்கத்துடன் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, உழவர்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களான கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மின்னணு வேளாண்மை, இயற்கை வேளாண்மை, சீர்மிகு சிறுதானியம், தென்னை, பயிர் பாதுகாப்பு முறைகள், பாரம்பரிய இரகங்கள், பசுமைக்குடில், செங்குத்து தோட்டம், நீரியல் தோட்டம், மாடித் தோட்டம், வேளாண் இயந்திரமயமாக்குதல், மதிப்பு கூட்டுதல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தும் சிறப்பு கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது.

வேளாண் சார்ந்த புதிய நவீன தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், வேளாண்மைஉழவர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களை எடுத்துரைக்கும் விதமாகவும் பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன.

இக்கண்காட்சியின் முத்தாய்ப்பாக, விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகள், நாற்றுக்கள், உயிர்உரங்கள் போன்ற வேளாண் இடுபொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை வாங்கவும், உழவன் செயலி பதிவிறக்கம், திட்டப்பதிவு மையம், தமிழ் மண்வள இணையதளம் மூலம் மண்வள அட்டை வழங்குதல் போன்ற இணையவழி சேவைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஒருங்கிணைந்த பண்ணையம், நுண்ணீர் பாசனம், நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றை செயல்விளக்கங்கள் மூலம் விவரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சி நடத்தப்படவுள்ள மூன்று நாட்களில் சுமார் 50,000 விவசாயிகள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்த பின்னர், பாரம்பரிய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற்ற 3 விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கிடும் விதமாக, முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம், ரங்கசாமி சார்பாக அவர் மனைவி திருமதி வீரம்மாளுக்கு 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், இரண்டாம் பரிசு பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மு.சரவணனுக்கு 75,000 ரூபாய்க்கான காசோலையும், மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மூர்த்தி அவர்களுக்கு 50,000 ரூபாய்க்கான காசோலையும் முதல்வர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர் செல்வம், மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். இனிகோ இருதயராஜ், அ. சௌந்தரபாண்டியன், செ. ஸ்டாலின் குமார்,

ந. தியாகராஜன், எம். பழனியாண்டி, பி. அப்துல் சமது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் மரு. (திருமதி) பீலா ராஜேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை குறளகத்தில் நேற்று முன்தினம் (26.07.2023) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கதர்கிராம தொழில் வாரிய அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில் காதி மற்றும் கதர்கிராம வாரியத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் மற்றும் கதர்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் முனைவர் எஸ்.சுரேஷ் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அரசியல் கட்சிகளிடமிருந்து ஒருமித்த கருத்திசைவு பெறப்பட்டுள்ளதா ?

பொது சிவில் சட்டம் குறித்து சிறுபான்மையினர், பொதுமக்கள் கருத்து என்ன?

நாடாளுமன்ற மக்களவையில் ஆ.ராசா கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28 -

ஒன்றிய அரசு பொது சிவில் சட்டத்தை கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்யுமாறு இந்திய சட்ட ஆணையத்தை, ஒன்றிய சட்டத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, பல்வேறு தரப்பினரிடம் கருத்து கேட்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் அச்சட்டம் பற்றி, சிறுபான்மை யினர் உள்ளிட்ட பெரும்பான்மை பொதுமக்களின் கருத்து என்னவென்று அறிந்து கொள்ளும் வகையில் நாடாளுமன்ற மக்களவையில் தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. கணேசமூர்த்தி, சு.திருநாவுக்கரசு, வழக்குரைஞர்டீன்குரியகோஸ்,ராகேஷ் சிங், ரவ்னீத் சிங் பிட்டு ஆகியோர் கேள்வி எழுப்பினார்கள்.

அது பற்றிய விபரம் வருமாறு :

(அ) 22வது இந்திய சட்ட ஆணையம் சமீபத்தில் பொது மக்கள், மத அமைப்புகள் மற்றும் சிறுபான்மை சமூகங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன், பொது சிவில் சட்டத்தை (யு.சி.சி) அமல்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கோரியுள்ளதா ?

(ஆ) அவ்வாறாயின், பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளின் விபரங்கள் குறித்து இது வரையில் பெறப்பட்ட அறிக்கை விபரங்கள்,

(இ) இதுவரை பெறப்பட்ட பரிந்துரைகள் போதுமான அளவில் இல்லாத நிலையில் பொதுமக்களிடம் அது பற்றி மேலும் எடுத்து செல்லும் நடவடிக்கைகள் அவசியமா..?

(ஈ) பொது சிவில் சட்டம் குறித்து கூடுதல் விள ம்பரப்படுத்தல் மற்றும் ஆலோசனைகள் கேட்பதற்கான கால வரம்பை நீட்டிக்க ஒன்றிய அரசாங்கம் உத்தேசித்துள்ளதா, அப்படியானால், அதை செயல்படுத்த கால நீட்டிப்பு செய்து நிர்ணயித்த காலக்கெடு பற்றிய விவரங்கள் ஏதேனும் முன் மொழியப்பட்டிருந்தால் அவை பற்றிய விவரம்,

(உ) பொது சிவில் சட்டம் கொண்டுவரப்பட்டால் ஏற்படும் சிக்கல்கள் குறித்து பல்வேறு சிறுபான்மை சமூகங்கள் எழுப்பும் குறைகள், அவர்களது ஆட்சேபனைகளை ஆய்வு செய்ய ஒரு ஆணையத்தை அமைக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன,

(ஊ) பொது சிவில் சட்டம் நாட்டில் உள்ள சிறுபான்மை சமூகங்கள், அனைத்து அரசியல்கட்சிகள் ஆகியவற்றின் ஒருமித்த கருத்திசைவை பெற்ற பிறகே கொண்டுவரப்படும் என்று ஒன்றிய அரசு அவர்களுக்கு உறுதி அளித்துள்ளதா ? அவ்வாறாயின் அது குறித்த விவரங்களை அளிக்கவும், அவ்வாறு கருத்திசைவு பெறப்படவில்லை என்றால் அதற்கான காரணங்களை தெரிவிக்கவும்.

மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய சட்டம் மற்றும் நீதித்துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் அளித்த பதில் வருமாறு :

(அ) முதல் (ஊ) இந்தியாவின் 21வது சட்ட ஆணையம் 31.08.2018 அன்று "குடும்பச் சட்ட சீர்திருத்தம்" குறித்த ஆலோசனைகளை மட்டும் வெளியிட்டது. அது எவ்விதமான அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை. மேற்படி ஆலோசனைகள் வெளியிடப்பட்டு நான்கு ஆண்டு களுக்கும் மேலாகிவிட்டதால், 22 வது சட்ட ஆணையம் 14.06.2023 அன்று பொது சிவில் சட்டம் குறித்த விஷயத்தின் பொருத்தம் மற்றும் முக்கியத்துவத்தையும், பல்வேறு நீதிமன்ற உத்தரவுகளையும் கருத்தில் கொண்டு பொதுமக்கள் மற்றும் மத அமைப்புகளின் கருத்துக்களையும் கேட்க முடிவு செய்தது. சம்மந்தப்பட்ட தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் அதாவது 2023 ஜூலை 28ம் நாள் வரை கால நீட்டிப்பு அளிக்க ஆணைக் குழு தீர்மானம் செய்துள்ளது.

இவ்வாறு, நாடாளுமன்ற மக்களவையில் ஒன்றிய இணையமைச்சர் பதிலளித்தார்.

தமிழ்நாடு அரசு
விழுப்புரம் நெடுஞ்சாலை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 13/2023–24 / தவஅ / நாள்: 24.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம்; வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி.2023–24ன் கீழ் விருத்தாசலம் (நெ). க(ம)ப, கோட்டத்தில் (VPM-052) ஒரு பணிக்கு இணையவழியில் ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 16.08.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.07.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ / 3966 / ஒப்பந்தப்புள்ளி / 2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க&ப வட்டம். விழுப்புரம்
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கோயம்புத்தூர் கட்டுமானம் (ம) பராமரிப்பு வட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 12 / 2023–24 / தவஅ / நாள்: 25.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, கோயம்புத்தூர் வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி. – 2023–24ல்** உள்ள **கோயம்புத்தூர் (நெ), க(ம)ப கோட்டம் – 1 பணி** மற்றும் **பொள்ளாச்சி (நெ), க(ம)ப கோட்டம் – 1 பணி** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.08.2023 பிற்பகல் 3.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **03.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ./4045/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, கோயமுத்தூர் வட்டம்
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 7 / 2023–24 / தவஅ / நாள்: 19.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், **தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி (நெ) க(ம)ப கோட்டங்களைச்** சார்ந்த 2023–24 சி.ஆர்.ஐ.டி.பி திட்டம் **பதினான்கு பணிகளுக்கு இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.08.2023 – 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 31.07.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ./4015/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப சேலம் வட்டம்,
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவண்ணாமலை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.17/2023–2024/தவஅ/நாள்–25.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 மற்றும் திட்டம் சாரா பணிகள் 2023–24, திருவண்ணாமலை மற்றும் செய்யார் (நெ), க(ம)ப கோட்டங்களைச்** சார்ந்த 4 பணிகளுக்கு இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.08.2023 அன்று 12.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **29.07.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ/4001/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ) க(ம)ப வட்டம், திருவண்ணாமலை
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
திருநெல்வேலி நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 14 / 2023 - 24 / வ 1 / நாள்: 24.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **தென்காசி** (நெ), க(ம)ப கோட்டம் சார்ந்த சி.ஆர்.ஐ.டி.பி 2023-24 **(1 வேலை)** திட்டப்பணிக்கு இணையவழியில் மட்டுமே இரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 16.08.2023, 14.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.07.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ /4036 / ஒப்பந்தப்புள்ளி / 2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம்.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருவண்ணாமலை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.16/2023–2024/தவஅ/நாள்–24.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 மற்றும் திட்டம் சாரா பணிகள் 2023–24, செய்யார் மற்றும் திருவண்ணாமலை (நெ), க(ம)ப கோட்டங்களைச்** சார்ந்த பணிகளில் **செய்யார் (நெ) க(ம)ப, கோட்டத்தின்** ஒரு பணிக்கு இரு உறைமுறையிலும் இதர **ஆறு** பணிகளுக்கு ஒரு உறை முறையிலும் (மொத்தம் 7 பணிகளுக்கு) இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.08.2023 அன்று 12.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **29.07.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ/4002/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ) க(ம)ப வட்டம், திருவண்ணாமலை
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.18/2023–2024/தவஅ/நாள் 22.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால், செங்கல்பட்டு (ம) காஞ்சிபுரம் (நெ) க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த சி.ஆர்.ஐ.டி.பி. 2023 – 2024 (2 பணிகள்) **இணையவழியில் மட்டுமே** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **18/08/2023 பிற்பகல் 12.30 மணி வரை** வரவேற்கப்படுகிறது.
பணியின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **02/08/2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ/4050/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம்
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை
இ.பொ.து.ந.க.எண்.எம்9/1207/2023
கீழ்கண்ட பணிகளுக்கு மேற்பார்வை பொறியாளர் (இ/தி.க.மே.) (பொ) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

கோப்பு எண்	பணியின் விவரம்	முன் வைப்பு தொகை
எம்.9/1207/2023	மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக, புகை பரப்பும் இயந்திரத்தை வாகனத்தில் பொருத்தி எடுத்துச் செல்வதற்கு 68 எண்ணிக்கையில் TATA ACE அல்லது அதற்கு இணையான வகை வாகனங்கள் ஒரு ஆண்டு காலத்திற்கு வாடகைக்கு அமர்த்துதல் (ஒப்ப விதிகளின் படி)	ரூ.2,90,700/-

குறுகிய கால ஒப்பம் சமர்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம், 07.08.2023 பிற்பகல் 3.00,
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 08.08.2023 பிற்பகல் 3.30 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in
செ.ம.தொ.இ / 4081 / ஒப்பந்தப்புள்ளி / 2023
மேற்பார்வை பொறியாளர் (இ/தி.க.மே)(பொ)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

தமிழ்நாடு அரசு
திருநெல்வேலி நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 13 / 2023 - 24 / வ 1 / நாள்: 22.07.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **தென்காசி** (நெ), க(ம)ப கோட்டம் சார்ந்த சி.ஆர்.ஐ.டி.பி 2023 - 24 (2 வேலைகள்) திட்டப்பணிக்கு இணையவழியில் மட்டுமே இரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 16.08.2023, 14.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 31.07.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெ